கடன் கணக்கில் ரூ.25,01,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (2–9–2021), வியாழக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–40 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

–ஏதுமில்லை–

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

44. மானியக் கோரிக்கை எண் 52–மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2021–2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

45. மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2021–2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

46. மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

47. மானியக் கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2021–2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

48. மானியக் கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை (குடிசைப்பகுதி மாற்று வாரியம்) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2021–2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

*2021 செப்டம்பர் 1*]

*49. மானியக் கோரிக்கை எண் 45–சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2021–2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*50. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2021–2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*51. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*52. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும் இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2021–2022. (தமிழ்)*

*53. தொழில் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் ஆகியோரால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2021–2022. (தமிழ்)*

*54. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2021–2022. (தமிழ்)*

———